www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 4 : 4 மார்கழி 2002

பொருளடக்கம்


- பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடல்
- உலக மயமாக்கல் பற்றிய கலந்துரையாடல்
- பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு
- முதற் பிறை
- பாரதி நினைவு தினம்
  - வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்பராம்
  - கிருமிச்சை கிராமமும் மக்கள் நிலமைகளும்
- பெண்கள் மாநாடு
  வாசகர் கடிதம்


**எத்தனை தடைகள்**
**எத்தனை இடர்கள்**
**தோன்றிய போதும்**
**உறுதிப் பாதையில்**
**பயணிக்கும் பெண்களின்**
**பதிவுகள்**
**செய்திமடலாய் - தொடர்ந்து**
**உங்கள் முன்**
**மலர்ந்து கொண்டே இருக்கும்**

*ஆசிரியை*

# பெண்கள் குழுக்களின் ஒன்று கூடல்-2002



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் வருடா வருடம் கிராமிய பெண்கள் சங்கங்களுக்கான வருடாந்த ஒன்று கூடலை நடத்தி வருகிறது. இந்த அடிப்படையில் முதலாவது ஒன்று கூடல் கிராமியப் பெண்கள்சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின், குமாரபுரத்தில் 1998 ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நாவற்குடா, முறக் கொட்டாஞ்சேனை, இருதயபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

அனேகமாக நகர் புறங்களை அண்டிய பகுதிப் பெண்கள் கூட பாடசாலைப் படிப்பு முடிந்ததும் திருமணம் என்றும், வீட்டு வேலை என்றும் தங்களை நாலு சுவர் களுக்குள்ளும், குறிப்பிட்ட சிறு வட்டத்திற்குள்ளும் அடக்கி கொள்கின்றனர். (அடக்கிகொள்ள வேண்டியுள்ளது) இத னால் இப் பெண்களுக்கு தங்கள் உணர்வுகளையும், ஆற்றல்களையும் வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைக் காமல் போவதுடன், அனேகமாக பெண்கள் சார்ந்து எழும் பிரச்சனைகளும் வெளித்தெரியாமல் மறைபட்டு போகின் றது. இவ்வாறான பெண்களை சகலவிதத்திலும் வலுப்படுத்த விளையும் நாம் அவர்களை குழுக்களாக ஒன்று படுத்தி யுள்ளோம்.

இவ்வாறு அமைக்கப்பட்ட பெண்கள் குழுக்கள் தங்கள் திறமைகளை வெளிக் கொண்டு வரவும், பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஆண்டுக்கொரு முறை ஒன்று கூடல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

இவ் வருடம் இவ் ஒன்றுகூடல் நிகழ்வுகள் சத்துருக் கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் 24-10-2002 அன்று இடம் பெற்றது. இதில் முறக்கொட்டாஞ்சேனை





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் முன்னேற்றச்சங்கம், இருதயபுரம் சினேகிதிகள் சங்கம், ஆரையம்பதி-காங்கேய நோடை சங்கமி சங்கம், பூநொச்சிமுனை பெண்கள் சங்கம், குமாரபுரம் உழைக்கும் மகளிர் சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம், சக்தி குழு, யாத்ரா குழு, உபகலாசாரக் குழுக்கள் ஆகியன கலந்துகொண்டன.

இவ் ஒன்று கூடலில் நிகழ்சிகள் யாவும் பெண்களின் நலனை, உடல் ஆரோக்கியத்தை, அறிவை, பெண்கள் குழுவின் ஒற்றுமையை வலுப்படுத்தும் சமயோசித திறனை, ஆற்றல்களை வெளிப்படுத்தும், வளர்க்கும் போட்டி நிகழ்ச்சிகளாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்த அடிப்படையில் பாட்டுக் கட்டுதல், ஆமை நடை, பொது அறிவு, தலையனை மாற்றுதல், உரு ஒழுங்கமைத்தல், மர்ம மனிசியைக் கண்டு பிடித்தல், சோடாபோத்தலில் தீப்பெட்டி வைத்து தட்டுதல், செங்கல்லில் நடத்தல், தொப்பி மாற்றுதல், பலூன் ஊதி உடைத்தல், ஓட்டம், போத்தலில் நீர் நிரப்புதல், ஆகிய போட்டி நிகழ்சிகள் நடைபெற்றன.



செங்கல்லில் நடத்தல்



தலையணை மாற்றுதல்



*அழகுநிறைந்த பூமி தன்னிலே - யாருமிங்கு*
*அடிமையில்லை புரிந்து கொள்ளுங்கள்*
*இயற்கை தன்னில் பெண்ணும் ஆணும்*
*உடலில் மட்டும் வேறுபாடு*
*பெண்ணே நீயும் துணிந்து பாரு பூமி உன்னை*
*ஒதிக்கிடாது*

ஐக்கிய தொழிலாளர்
காங்கிரஸ்
08-11-2002

ஆசிரியர்,

சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையம்

அன்பின் ஆசிரியர் அவர்களுக்கு,

தங்களு டைய சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய வேலைத்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களை பெண்கள் செய்தி மடல் மூலமாக அறிகிறோம்.

இந்த நூற்றாண்டில், பெண்விடுதலை சம்பந்தமாக தாங்கள் எடுக்கின்ற அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிபெற வாழ்த்துகிறோம். அதேபோன்று மலையகத்தில் பெண்ணினத்தைப் பொறுத்தவரையில் இயந்திர பொருளாக பாவிக்கின்ற அடிமைத்தனம் இன்றும் நிலவத்தான் செய்கிறது. யுத்தமின்றி ரத்தமின்றி இனஅழிப்புக்கான முன்னோடி திட்டமான திட்டமிட்ட கருக்கலைப்பிற்கு இன்று இளந்தாய்மார்களுக்கு கருத்தடை செய்வதையும் நாம் பத்திரிகை வாயிலாக வெளிக்கொணர்ந்துள்ளோம். இந்த நிலையில் தங்களுடைய பத்திரிகையின் மூலமாக எமது மலையக பெண்ணினத்தின் விடுதலைக்கு குரல்கொடுக்கலாம் என நம்புகிறோம். தங்களுடைய பத்திரிகையை எங்களுக்கு அனுப்புவதுடன் மேலதிக விபரங்கள் இருப்பின் எமக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நன்றி.

பொதுச் செயலாளர்

www.tamilarangam.net

# உலகமயமாக்கல் பற்றிய கலந்துரையாடல்

**எங்கோ இருக்கும் உற்பத்தியாளர்களில் வைக்கும் நம்பிக்கையை**

**எமது உற்பத்திகளில் வைத்தால் என்ன?**

**செயற்கையில் வைக்கும் நம்பிக்கையை இயற்கையில் வைத்தால் என்ன?**

25.09.2002 அன்று "உலகமயமாக்கல்" எனும் தலைப்பில் அமைந்த கலந்துரையாடல் மொன்லார் (Monlar) நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு கொழும்பிலுள்ள "இன்போம்" (Inform) அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் சுமார் இருபது பங்குபற்றுனர்கள் கலந்து கொண்டனர். அதனுடன் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் கலாசார செயற்பாட்டாளர்களாகிய அமுதா, விஜி, மஞ்சு, ஜெஸ்மின், ஜீவா ஆகிய நாங்கள் ஐந்து பேர் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது.

உலகமயமாக்கல் என்னும் தலைப்பின் கீழ் முக்கியமாக என்ன விடயங்களைக் கொண்டு வரலாம் என்று நடத்துனராக இருந்த மொன்லார் நிறுவனத்தின் இணைப்பாளர் ரொணி (Rony) அவர்கள் கேட்டுக் கொண்டபோது சில விடயங்கள் கூறப்பட்டன. அவையாவன.

1. வெளிநாட்டுப் பொருட்களின் வருகையால் வரும் பாதிப்பு
2. வெடிகுண்டு உற்பத்தியை நிறுத்துதல்.
3. சிறுவர்களின் பாதிப்பு
4. பெண், ஆண் சமத்துவம்
5. பாரம்பரிய கைத் தொழில்கள் பாதுகாக்கப் படல்
6. விவசாயத்தை ஊக்குவித்தல்.

இவற்றோடு இன்னும் சில விடயங்களும் கூறப்பட்டு, அவை அனைத்தும் எழுதப்பட்டது. இதுபோன்ற கலந்துரையாடல் இன்னும் சில இடங்களில் நடாத்திய பின்பு உலகமயமாக்கல் என்னும் விடயத்தின் கீழ் வரும் பலரது கருத்துக் களையும் ஒன்று சேர்த்து எதிர் வரும் ஐப்பசி மாதம் 24ம் திகதி அன்று பெரிய அளவிலான மாநாடு ஒன்று நடைபெறும் என்பதையும் அதில் அரச சார்பற்ற நிறுவனங்களே பெரும் அளவில் கலந்துகொள்ளும் என்றும் கூறப்பட்டது.

அம் மாநாட்டில் முன் வைக்கப்படும் கருத்துக்களின் பயன்பாடு பற்றிய விளக்கங்கள் பின்னர் மக்கள் அறிவதற்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

எனவே இதற்கென இலங்கையிலுள்ள வழங்குனர்களைத் தெரிவு செய்து அவர்கள் மூலம் மக்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு தகவல் வழங்கப்படுவது பற்றியும் கூறப் பட்டது.

அத்துடன் இது பற்றிய மூன்று மொழியிலுமான அறிக்கை சமர்ப்பிப்பதோடு, இலங்கையிலுள்ள அமைப்புக் களை வெளிநாட்டு அமைப்புக்களுடன் இணைத்து எவ் வாறு தொடர்புகளை வைத்துக் கொள்வது, போன்ற விடயங்களும் பார்க்கப்படும் எனவும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கலாசாரக்குழு சார்பில் கலந்து கொண்ட எங்களால் முன் வைக்கப்பட்ட கருத்துக்களும் அதனோடு சம்பந்தமாக நாங்கள் நிகழ்த்திய வில்லுப் பாட்டும் (நம்ம ஊருப் பொருட்களெல்லாம் நமக்கு நல்லபயன்தருமே) பலருக்கு பல கருத்துத் தெளிவை ஏற் படுத்தியது என்பதை அங்கு கலந்துகொண்ட பயிற்சி யாளர் மூலமும், பயிற்றுனர் மூலமும் அறியக் கூடிய தாக இருந்தது.

*எமது எதிர்காலச் சந்ததியினருக்கு*

*பிளாஸ்டிக்கை அன்றி*

*கட்டடங்களை அன்றி*

*நோய்களை அன்றி*

*பாலைவனங்களை அன்றி*

*இயற்கையைப் பேணிச் சொத்தாகக் கொடுப்போம்*

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வுக் கருத்தரங்கு




மட்டக்களப்பு - சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினால், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நவம்பர் 19ம் திகதி சூரியா சட்ட உதவித் திட்ட இணைப்பாளர் விஜி முருகையா அவர்களின் ஒழுங்கமைப்பில் மட்/ தாண்டவன்வெளி, பேர்டினன்ட்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக பேராசியையும், சூரியா இணைப்புக் குழு உறுப்பினருமான சித்திரலேகா மௌன குருவின் தலைமையில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் வழங்குனர்களாக சிரேஷ்ட சட்டத்தரணி தங்கவேல், சட்டத்தரணி மங்களேஸ்வரி, சட்ட வைத்திய அதிகாரி சந்திர பாலன், கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளரும் சூரியா இணைப்புக் குழு உறுப்பினருமான கமலினி கணேசன், சூரியா நிர்வாக இணைப்பாளர் வாசுகி ஜெயசங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

"சட்டப் பாதுகாப்பும் பெண்களுக்கான உரிமையும்" எனும் தலைப்பில் சட்டத்தரணி தங்கவேல் அவர்கள் கருத்துரை வழங்கினார்.

இவர் நாட்டில் நடக்கும் குற்றச்செயல்களையும், அதற்குரிய சட்டங்கள் தண்டனைகள் பற்றிக் குறிப்பிட்டதுடன் பெண்களுக்குரிய சட்டங்கள், அவர்களுக்கெதிரான குற்றச் செயல்களுக்குரிய தண்டனைகளையும், சில வழக்குச் சம்பவங்களையும் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டங்களின் கீழ் கைதாகும் பெண்கள் பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் அதிகாரிகளால் பாலியல் பலாத்காரத்திற்கும் சித்திரவதைக்கும் உட்படுவதும், வேலைபார்க்கும் இடங்களில் உயர் அதிகாரிகளால், வீட்டு உறவினர்களால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுவதும், மற்றும் சிறுவர்கள் துஸ்பிரயோகத்திற்பட்டு வந்த சில வழக்குகளையும் குறிப்பிட்டார்.

ஆகவே பாதிக்கப்பட்டவர்கள் முன்வந்து, துணிந்து குற்றவாளிகளை வெளியே தெரியப்படுத்த வேண்டும். ஆனால் பெண்கள் சமூகத்தின் பார்வைக்குப் பயந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள். மற்றும் சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி சட்டத்தரணிகள் குற்றவாளிகளை தப்பவைத்துவிடும் சந்தர்ப்பங்களும் உண்டு. அத்துடன் பணம் படைத்தவர்கள், அரசியல் தலைவர்களின் தலையீடுகளும், பிடியாணை, அழைப்பாணை கொடுப்பதில் கிராமசேவகர்கள் ஏற்படுத்தும் தாமதமும் குற்றவாளிகளை தப்பவைத்துவிடுவதுண்டு. ஆகவே குற்றவாளிகள் தப்ப இடம்கொடாமல் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் கிராமசேவகர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அடுத்து, சட்டரீதியாக பெண்களது உரிமைகளை பெறுதலும், தாமதமும், பிரச்சினையும் எனும் தலைப்பில் சட்டத்தரணி மங்களேஸ்வரி உரையாற்றினார். இவர் குடியியல் சட்டம், குற்றவியல் சட்டம் பற்றிய விளக்கத்துடன் நீதிமன்றத்தில் வழக்குகள் தாமதம் ஆவதன் காரணங்களை பின்வருமாறு சுட்டிக்காட்டினார்.

1. வழக்குகள் பொலிசாரினால் நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்படுகிறது. ஆனால் சில பொலிசாருக்கு வழக்குகள் பற்றிய போதிய விளக்கம் இன்மையால் நீதிமன்றத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்படுவது தாமதம் ஆகின்றது.
2. வழக்குத் திகதிகளில் எதிராளி சமூகம் அளிப்பது இல்லை.
3. கிராமசேவகரிடம் வழங்கப்படும் பிடியாணை, அழைப்பாணை சிலசந்தர்ப்பங்களில் எதிராளிக்கு கொடுக்கப் படுவதில்லை.
4. கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழும் எதிராளி, கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் தப்பி ஒளித்தல்.
5. முறைப்பாட்டுக்காரர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றத்திற்கு வருவதில்லை.
6. சட்டத்தரணி வரத் தாமதம்.
7. சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் ஏற்படும் தாமதம்.
8. அரச பகுப்பாய்வாளர் திணைக்கள அறிக்கை தாமதம்.
9. சாட்சி, அரச உத்தியோகத்தராக, 3 மைலுக்கு அப்பால் உள்ளவராக இருப்பின் முறைப்பாட்டுக்காரரால் சாட்சிக்கு வட்டா வழக்கப்படவேண்டும். (அரசால் அனுமதிக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டணம்) இங்கு முறைப்பாட்டுக்காரர் வறியவராயின் வட்டா அவரால் வழங்கமுடியாத நிலை காணப்படும். இதனால் சாட்சி நீதிமன்றத்திற்கு வருவதில்லை.
10. நாட்டுச் சூழல் : உதாரணம் கர்த்தால்.

ஆகவே வழக்குகள் மேற்கூறிய காரணங்களால் தாமதப்படுத்தாது இருப்பதற்கு பொறுப்புவாய்ந்தவர்கள் கவனம் எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

www.tamilarangam.net

அடுத்து சட்டவைத்திய அதிகாரி சந்திரபாலன், "சட்ட மருத்துவ ரீதியாக நீதியை பெற்றுக்கொள்ள சமூகம் எடுக்க வேண்டிய நடவடிக்கை" பற்றி உரையாற்றினார்.

பெண்கள் குடும்பத்திற்குள்ளும், குடும்பத்திற்கு வெளியேயும் வன்முறைகளை எதிர்கொள்கின்றனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகும் பெண்கள் மிக மோசமான பாலியல் வன்முறைக்கு உட்படுகின்றனர். இவர்களுக்கு வெளியில் இருந்தும், பெண்கள் நிறுவனங்களிடம் இருந்தும், வேறு நிறுவனங்களிடம் இருந்தும் பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கப்பெற வேண்டும்.




மற்றும்,

1. பெண்ணின் திருமண வயது 18 ஆகும். 18வயதுக் குட்பட்ட பெண்களின் மேல் பாலியல் உறவு கொள்வது சட்டப்படி குற்றமாகும். பெண்ணின் வயதை பிறப்புச் சான்றை வைத்தே கணிப்பிட முடியும். ஆனால் படிப்பறிவில்லாத பெற்றோர் பிள்ளைகளுக்கு பிறப்புப் பதிவு வைத்திருக்க மாட்டார்கள்.
2. திருமணம் முடித்த தம்பதியர் நீதி மன்ற ஆணைப்படி பிரிந்திருக்கும்போது கணவன், மனைவியை உடலுறவிற்குட்படுத்தல் சட்டப்படி குற்றமாகும்.
3. சட்ட பாதுகாப்பில் பெண் இருக்கும்போது, பாதுகாப்பு அதிகாரி, தன் அதிகாரத்தை பாவித்து பெண்ணின் மீது பாலியல் உறவு கொள்வது குற்றச் செயலாகும்.
4. பெண்ணிற்கு மயக்க மருந்து, போதை வஸ்து வழங்கி உடலுறவுகொள்வது குற்றம்.
5. பெண்ணின் இரத்த உறவுகள் அப் பெண்ணின் மீது பாலியல் உறவு கொள்வது குற்றமாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளுக்கு சட்டப்படி வழக்குப் போடலாம். இவ்வாறான குற்றச் செயல்களை இலகுவில் இனங்காணக் கூடியவராய் கிராம சேவகர்கள் உள்ளனர். எனவே இவர்கள் குடும்பங்களை கிராம சேவகர் என்ற அடிப்படையில் சந்திக்க வேண்டும். இக் குற்றச் செயல்களை நிரூபிக்க படுக்கைப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, மரபணுபரிசோதனை போன்ற பரிசோதனை முறைகள் உண்டு.

ஆனால் இந்த முறைகளும் இதன் முக்கியத்துவமும் பெற்றோருக்கோ, பொலிசுக்கோ, பிள்ளைக்கோ தெரிவதில்லை. ஆகவே இதன் முக்கியத்துவத்தை கிராம சேவகர் விளங்கப்படுத்தலாம். குடும்பங்களை கிராம சேவகர் சந்திப்பதன் மூலமும், சந்தேகமான குடும்பங்களை தொடர்பார்வைக்கு கொண்டு வருதல் மூலமும் தீப்பற்றுதல், நஞ்சுகுடித்தல், கொலை செய்யப்படுதல் போன்ற மரண இழப்புகளில் இருந்து பெண்களைக் காக்கலாம். அத்துடன் இவர்களின் எதிர்கால உரிமை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் இருந்தும் மீட்கலாம். இக் குடும்பங்களுக்கு விழிப்புணர்வு நடவடிக்கைகளைச் செய்யலாம் என தனது கருத்துரையை வழங்கினார்.

அடுத்து பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச சட்டங்கள் பற்றியும், தேசிய சர்வ தேசிய சட்டங்களை சமூக மட்டத்தில் அமுல் படுத்துவது பற்றியும் விரிவுரையாளர் கமலினி கணேசன் கருத்துரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சூரியா நிர்வாக உத்தியோகத்தர் வாசுகி ஜெயசங்கரால் குழுச் செயலமர்வு இடம் பெற்றது. முதலில் சூரியாவின் தோற்றமும் செயற்பாடுகள் பற்றியும் இவர் விளக்கம் அளித்தார்.

கொழும்பிற்கு இடம்பெயர்ந்து சென்ற பெண்களுடன் வேலை செய்வதற்காக 1991ம் ஆண்டு கொழும்பில் "சூரியா" உருவாக்கப்பட்டது. இப் பெண்கள் மீளக் குடியமர்தலின்போது அவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்காக இவர்களுடன் வேலை செய்யும் பொருட்டு மட்டக்களப்பில் 1994ல் தனது அலுவலகத்தை அமைத்தது. தற்போது அதன் வேலைத் திட்டங்களாக

- கலைச் செயற்பாடு
- வெளியீடுகள் செய்தல்
- நூலகம்
- வலைப் பின்னல் ஊடாக தொடர்புகள் வைத்தல்
- பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான சட்ட உதவித் திட்டம் போன்ற வேலைகளைச் செய்கின்றது.

இதில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் குறைக்கும் / தடுக்கும் நடவடிக்கையில் முதல் உறு துணையாய் இருப்பவர்கள் கிராம சேவகர்களே எனக் குறிப்பிட்டார்.

அடுத்து கிராம மட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறையை எவ்வாறு

1) மக்களுடன் அனுகித் தடுப்பது.
2) நிறுவனங்களுக்கூடாக எவ்வாறு தடுப்பது
3) கிராம சேவகர்கள் என்ற வகையில் எவ்வாறு தடுப்பது எனும் குழு நிலைச் செயல் அமர்வு இடம் பெற்றது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதில் கிராம சேகவர்கள் கருத்தாக
- பிரச்சினையை இனம் காணல்
- விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தல்
- பெண்களுக்கு தற்பாதுகாப்பு பயிற்சிகள் வழங்கல்.
- விளக்கப்படங்கள், துண்டுப் பிரசுரம், சுவரொட்டிகள் மூலம் பிரச்சினைகளையும், பாதுகாப்பு சட்டங்களையும் மக்களுக்கு தெரியப்படுத்தல்
- மக்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் வசைபாடும் செயல்களைத் தடுத்தல்
- பாதிக்கப்பட்டவரே முன்வந்து அநீதியை சொல்லக் கூடியவாறு சந்தர்ப்பத்தை உருவாக்கல்.
- பெண்களுக்காக வேலை செய்யும் நிறுவனங்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல்
- அந்நிறுவனங்களுடன் இணைந்து பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான நிகழ்வுகளில் பங்கு கொள்ளல்.
- கிராம குழுக்களை உருவாக்கல்
- பாடசாலை மட்டத்தில் துண்டுப் பிரசுரம் செய்தல்



- பிரச்சனைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவித்தல்.
- சட்டப்படி செயற்படுதல் - போன்ற கருத்துக்களை முன் வைத்தனர்.

-விஜயலட்சுமி சேகர்-

# முதற் பிறை

பெண்கள் பலர் எழுதத் தொடங்கினாலும் அறிமுகமற்ற திறமையுள்ள அனேக பெண்களுக்கு கால் பதிக்க களம் கிடைப்பதில்லை. அக்குறைபாட்டை நீக்கும் நோக்குடன் எமது செய்திமடலில் இப்பகுதியை தருகின்றோம்.

## பெண்களும் சமாதானமும் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

நம்நாட்டில் கிட்டத்தட்ட 16, 17 வருடங்களாக யுத்தத்தின் காரணமாக இனஒற்றுமை சீர்கெட்ட நிலையை அடைந்துள்ளது. பெற்றோர் ஒரு இடத்திலும், பிள்ளைகள் வேறு இடத்திலும் அலைகின்றனர். கொலை, கொள்ளை, பலாத்காரம் என்று தினமும் வானொலியிலும் பத்திரிகைகளிலும் செய்திகள் வருகின்றன. பெண்கள் சுதந்திரமாக தெருவில் நடக்க முடிவதில்லை. யுத்தகாலங்களில் வைத்தியசாலைக்குச் செல்வதென்றால் காவல் துறையினரின் கேள்விகளுக்கு கர்ப்பிணி பெண் என்றால் கூட முழு விபரம் சொன்னால்தான் போகமுடியும். சிறு பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தி சீர்குலைய விடுவதும் உண்டு. நாட்டுப் பிரச்சினையில் எத்தனை உயிர்கள் பலி என்பதைக் கணக்கிட்டு சொல்லமுடியாது. பிள்ளைகளின் கல்விக்குப் பங்கம், நேரான சாப்பாடு கிடையாது, பெற்றோரின் கூக்குரல்கள், சிறைவாசம், ஊரைவிட்டு ஓடி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த மக்கள் எத்தனை பேர், சொந்த ஊரைவிட்டு சொந்த வீடு வாசலைத் துறந்து வேறு ஊர்களில் குடியிருப்போர் எத்தனைபேர். பிள்ளைகளுக்கு கல்விகற்கக்கூட முடியாத நிலை.

சமாதானத்தை அனைவருமே விரும்பினர். பெண்கள் எல்லாத் துறைகளிலும் பங்கேற்றனர். சமாதானத்தைப் பிரதிபலிக்கும் வசனங்கள் எழுதி பெண்கள் ஊர்வலம் வந்தார்கள். நாடகங்கள் மூலமும் மற்றைய இனத்தவரோடு கலந்து பேசியும், கருத்தரங்குகள் வைத்தும் தங்கள் பங்களிப்பினை செய்துகாட்டினர். ஆண்டுதோறும் வரும் மகளிர் தினத்தில் பெண்கள் சமாதானத்திற்கான வசனங்கள் கொண்ட சுலோகங்கள் தாங்கி ஒவ்வொரு பிரதேசத்திலும் தங்கள் பங்களிப்பைத் திறம்பட செய்து வருகின்றனர். இதன் பணிபுரிந்து கொண்டிருக்கும் பெண்களின் சேவையை நாம் நினைத்துப் பெருமை அடையவேண்டும். தொழில் புரியும் பெண் மட்டுமல்ல இல்லத்தரசிகளாக இருக்கும் பெண்கள் அனைவருமே சமாதானத்தை விரும்புகின்றனர்.

சென்ற காலங்கள் கண்ணீரில் கரைந்தது என்று மனதில் அச்சம் கொள்ளாமல் தற்போதைய சமாதான ஏற்பாடுகளிலும் பெண்கள் அனைவருமே சேர்ந்து வெற்றி காணவேண்டும்.

நாட்டில் யுத்தம் நீங்கிச் சமாதானம் வருவதற்கு பாடுபடும் இந்நாட்களில் பெண்களும் தைரியமாகத் தமது பங்குதனை அளிக்க முன்வரவேண்டும். சமாதானத்தில் அனைத்து இன மக்களும் ஒன்றிணைய எமது பெண்கள் ஒருபோதும் தயங்குவதில்லை. பெண்கள் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட போதும் எதிர் நீச்சல் போட்டு பல துறைகளிலும் முன்னேறி வருவதைக் காணலாம்.

-ரஞ்சிதமலர் குகதாசன்-


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரதி நினைவு தினம்



மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுதின நிகழ்வுகள் 2.10.2002 அன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது. பாரதியார் தான் வாழ்ந்த 1882 - 1921 ஆண்டு வரையான காலப் பகுதியில் தேசவிடுதலைக்கு மட்டுமன்றி அடக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட பெண்களின் விடுதலைக்காக குரல்கொடுத்தவர்களில் தனி இடத்தைப் பெறுகிறார். பெண்கள் தங்களை உணர்ந்து, வலைகளை அறுத்து வெளிவரவேண்டும் என வலியுறுத்தி பல பாடல்களை ஆக்கியுள்ளார்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்.

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்"

எனும் இவரது கும்மிப்பாடல் வரிகளில் இவரது பெண்விடுதலையின் வேட்கை புரிகிறது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பாரதி நினைவுதினக் கண்காட்சியில் இவரது குடும்பப் புகைப்படங்கள் உட்பட இவரை ஆசிரியராக கொண்டு வெளிவந்த பத்திரிகைகளில் முதற்பக்கங்களின் போட்டோ பிரதிகள், இவரது நூல்கள் என்பன காட்சிக்கு வைக்கப் பட்டிருந்தன.

**மின்னலாய்ப் பாயும் பாரதி வரிகள்**

* "*நமது விழிகளிலே மின்னல் பிறந்திருக்க*
*நமது நெஞ்சிலே மின்னல் விசிறிப்பாய்க*
*நமது வலது கையிலே மின்னல் தோன்றுக*
*நமது பாட்டு மின்னலுடைத்தாகுக*
*நமது வாக்கு மின்போல் அடித்திருக்க*"

* "*அறிவு கொண்ட மனித உயிர்களை*
*அடிமையாக்க முயல்பவர் பித்தராம்*"

* "*விடுதலைக்கு மகளிரெல்லாம்*
*வேட்கை கொண்டனம்*"

* "*மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையை கொழுத்துவோம்*"

# "வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்"

## பெண்கள் மீது பாலியல்வல்லுறவுகள்

**சம்பவம் - 1**

ரியூஷன் வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 15 வயது மாணவியை பத்து மாணவர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் கிருல்ல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

**சம்பவம் - 2**

மற்றொரு சம்பவத்தில் ஹிரிப்பிட்டியவில் பஸ்ஸுக்கு காத்துநின்ற 20 வயது யுவதியை ஆட்டோவில் வந்த மூவர் கடத்திச்சென்று பாலியல் குற்றம் புரிந்துள்ளனர். இந்த யுவதி தற்போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தகவல் -
*தினக்குரல் நவம்பர் 14*

## பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றவர்களுக்கு கராட்டி மூலம் 'பாடம் புகட்டிய' பெண்மணி

தன்மீது பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற மூன்று இளைஞர்களுக்கு குடும்பப் பெண்ணொருவர் கராட்டி மூலம் 'முறையான பாடம் கற்பித்து' பொலிஸாரிடம் பிடித்துக்கொடுத்த துணிகர சம்பவம் ஒன்று கடந்த புதன்கிழமை வெலிகம பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

நிக்கவரெட்டியவைச் சேர்ந்த இப்பெண்மணி வெலிகமவிலுள்ள தனது உறவினர் வீட்டு மங்கள நிகழ்வொன்றில் கலந்துகொண்டுவிட்டு ஊர் திரும்புவதற்காக பஸ் தரிப்பு நிலையம் நோக்கி ஆட்டோவொன்றில் சென்று கொண்டிருந்த போதே இச்சம்பவம் நிகழ்ந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

- தகவல் -
*தினக்குரல் நவம்பர் 25*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் கிருமிச்சை கிராமமும் அங்குள்ள மக்கள் நிலமைகளும்

சமாதான சூழலில் பெண்களது வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா? அவர்கள் எவ்வாறு தமது நிலையை உயர்த்திக்கொள்ள விரும்புகின்றனர்? என்பது பற்றிய ஆய்வினை சர்வதேச பெண்கள் சமாதானகுழு மேற்கொண்டது. அவர்களுடன் சேர்ந்து இவ் ஆய்வினை மேற்கொண்ட எமக்கு வாகரை கிருமிச்சை கிராம பெண் களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது.

அங்கு 72 குடும்பங்கள் வாழ்கின்றனர். கடந்த 90ம் ஆண்டு இனப் பிரச்சனை காரணமாக கிருமிச்சை யில் இருந்து இவர்கள் இடம் பெயர்ந்து மாங்கேணியில் இருந்துள்ளார்கள். திரும்பவும் 95ம் ஆண்டு கிருமிச்சைக்கு வந்துள்ளனர். கிருமிச்சை தனிமைப்படுத்தப்பட்ட ஓர் கிரா மம். பிரயான வசதிகள் இல்லை தண்ணீர் வசதி இல்லை. பாடசாலை 5ம் ஆண்டு வரை. கிராமிய மருத்துவிச்சிமார் மூலம் குழந்தைப் பேறுகள் வீட்டில் நடக்கின்றன. வைத்தி யசாலை வசதி இல்லை. இவர்களது தொழில்களாக மீன் பிடித்தல், சிறிய அளவிலான தோட்டம், அதில் மரக்கறி, கச்சான், பயறு போன்றவை செய்கின்றார்கள். அதற்கு போதிய தண்ணீர் வசதி இல்லை. ஒரு கிணறு மட்டும் உள்ளதால் இரவு நேரங்களில் நீண்ட நேரம் நின்று பெண்கள் தண்ணீர் எடுக்கின்றார்கள். இதனால் இப் பெண்களுக்கு போதிய நித்திரை இல்லை.

இக்கிராம மக்கள், அரசு மற்றும் ஏனையோரால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றார்கள். எகெட், ஒக்ஸ்பாம் (Oxfam), எம் எஸ் எப் (MSF) சிறிதாக உதவி செய்கின்றன. கடந்த 90ம் ஆண்டு இவர்களது குடிசைவீடுகள் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன. சிலர் காணாமல் போனார்கள். தற்போதைய சமாதான சூழலி னால் இவர்களால் பயமில்லாமல் காட்டிற்கு விறகுவெட்ட செல்லக்கூடியதாகவும் தேன் எடுக்கச் செல்லக்கூடிய தாகவும் உள்ளது.

எனினும் இக் கிராமம் தனிமைப்படுத்தப்பட்டதாக வும் தொடர்புசாதன வசதிகள் எதுவுமற்ற நிலையில் காணப்படுவதாலும் இங்குள்ள மக்கள் தற்போதைய சமா தான சூழல், புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சு வார்த்தைகள் போன்ற அரசியல் நடவடிக்கைகளைப்பற்றி அறிய முடியா தவர்களாய் உள்ளனர். இங்கு குடும்ப வன்முறை மிக அரி தாகவே காணப்படுகின்றது. அதற்கு மதுபான வசதிகள் இங்கு இன்மையும் ஒரு காரணமாகும்.

இங்கு அரசு தனியார் துறையினர் கவனமெடுத்து உடனடியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கைகள். போக்குவரத்து வசதிகள், வைத்தியசாலை, தண்ணீர் மின்சாரம், மலசலகூட வசதி, பாடசாலை வசதி (உ/த), தொழில் வாய்ப்பு, வீட்டுவசதி போன்றவை.

**விஜயகுமாரி முருகையா**

## பெண்கள் மாநாடு

**ஒக்டோபர் 2002**

கடந்த ஒக்டோபர் 5ம், 6ம் திகதிகளில் திருகோணமலையில் "பெண்கள் மாநாடு" மனிதவளநிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்தது.

இம்மாநாடு "பெண்களில் அரசியல் பங்களிப்பை அதிகரிக்க செய்தல்" என்பது பற்றிய மாநாடு எனக் கூறப்பட்டிருந்த போதிலும் பரந்துபட்டதாக ஒழுங்கமைக்கப் பட்டிருந்தது.

இம்மாநாட்டில் முக்கிய அம்சமாக குழுநிலை விவாதம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

1. சமாதான உருவாக்கத்தில் பெண்களின் பங்கு.
2. முஸ்லீம் தமிழ் சமூகங்களிடையே ஒற்றுமையைப் பேணுவதில் பெண்களின் பங்கு.
3. வடகிழக்கின் புனரமைப்புத்திட்டங்களில் பெண்களுக்கு சாதகமான பொருளாதாரக் கொள்கை

குழுநிலை விவாதங்களைப் பொறுத்தமட்டில் "சமாதான உரு வாக்கத்தில் பெண்களின் பங்கு", "தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் ஒற்றுமையை பேணுவதில் பெண்களின் பங்கு" போன்ற தலைப்பிற்குப் பெருந்திரளான பெண்கள் குழுமியிருந்து தங்கள் கருத்துக்களை முன் வைத்தார்கள்.

2ம் நாள் நிகழ்வானது "வடகிழக்கின் பெண்கள் வலையமைப் பின் கட்டமைப்பை வரையறுத்தல்" தொடர்பானதாக இருந்தது."

தகவல் – **மங்களா**

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**இல.20, டயஸ் வீதி,**

**மட்டக்களப்பு.**

**தொ.பேசி–23297**

முகவரி:- ........................................

........................................

........................................

........................................

ISSN.1391-6130

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்